பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
14 04 2025 MONDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- அரசியல் சாசன சிற்பி டாக்டர் அம்பேத்கரின் 134-வது பிறந்த நாளையொட்டி, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அன்னாரது சிலைக்கு குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

- தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 11 ஆண்டுகால ஆட்சியில் 75க்கும் மேற்பட்ட புதிய விமான நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- போதைப்பொருள் இல்லாத இந்தியவை உருவாக்க மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

- தமிழகத்தில் சித்திரை திருநாளான இன்று தமிழ் புத்தாண்டு தினமாக விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>><<<<<<

அரசியல் சாசன சிற்பி டாக்டர் அம்பேத்கரின் 134-வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அன்னாரது சிலைக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே, திருமதி சோனியா காந்தி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா உள்ளிட்டோரும் நாடாளுமன்றத்தில் அம்பேத்கர் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, வெளியிட்டுள்ள செய்தியில், கல்வி மட்டுமே ஏழை எளிய மக்களிடையே சமூக மாற்றத்தை கொண்டு வந்து அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்யும் என்ற சிந்தனையோடு பாடுபட்டவர் அம்பேத்கர் என்று கூறியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்காகவும், எதிர்கால சந்ததியினரின் நலனுக்காகவும் பாடுபட்டவர் அவர் என்றும் தெரிவித்துள்ளார்.

அம்பேத்கரின் சிந்தனைகளை நம் வாழ்க்கையில் பின்பற்றி நடக்க வேண்டும் என்றும் சமூக நல்லிணக்கத்தையும், சமத்துவத்தையும் பாதுகாக்க ஒன்றுபட்ட உணர்வோடு பாடுபடுவோம் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற டாக்டர் அம்பேத்கரின் கனவை நிறைவேற்ற அர்ப்பணிப்போடு செயல்பட வேண்டும் என்ற உணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் தினமாக அம்பேர்கரின் பிறந்தநாள் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தற்சார்பு மிக்க வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற என்ற இலக்கை எட்டுவதற்கு அம்பேத்கரின் கொள்கைகள் நமக்கு துணை புரியும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் சமத்துவ தினமாக கொண்டாடப்படுகிறது.

சென்னை, அம்பேத்கர் மணிமண்டபத்தில் உள்ள அன்னாரது சிலை முன்பாக வைக்கப்பட்டிருந்த உருவப்படத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாநில அமைச்சர்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. தொல். திருமாவளவன் உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தி சமத்துவ நாள் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

சேலத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு எதிர்க்கட்சித்தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மத்திய - மாநில அரசு அலுவலகங்களில், ஊழியர்கள் அம்பேத்கர் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

>>>>>>><<<<<<

தேசிய ஜனநாய கூட்டணி அரசின் 11 ஆண்டுகால ஆட்சியில் நாட்டில் உள்ள விமான நிலையங்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அம்பேத்கர் ஜெயந்தியை ஒட்டி, ஹரியானா மாநிலம், Hisar விமான நிலையத்தில், இரண்டாவது புதிய முனையத்திற்கு அடிக்கல் நாட்டி பேசிய பிரதமர், கடந்த 2014ஆம் ஆண்டு 74 விமான நிலையங்கள் மட்டுமே இருந்ததாகவும், தற்போது 150க்கும் மேற்பட்ட விமான நிலையங்கள் செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

விமான போக்குவரத்து கட்டமைப்பு வலுப்பெற்றிருப்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்திருப்பதாக அவர் கூறினார்.

அனைத்து தரப்பு மக்களுக்கும் விமான சேவை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக கூறிய அவர், இதனை நிறைவேற்ற அர்ப்பணிப்பு உணர்வுடன் தமது தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மத்திய அரசின் உடான் திட்டத்தின் கீழ், ஆயிரக்கணக்கான மக்கள் முதல்முறையாக விமானத்தில் பயணம் செய்து, இனிமையான அனுபவத்தை பெற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உடான் திட்டத்தின் கீழ், சிறிய நகரங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் விமான சேவை வழங்கப்பட்டுள்ளதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாளில், சாதாரண மக்களும் பயன்பெறும் வகையில் புதிய திட்டங்களை தொடங்கிவைப்பது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக கூறிய அவர், பொருளாதார ரீதியாக பின்தங்கியோர், ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர், அம்பேத்கர் பிறந்த நாளை பண்டிகையாக கொண்டாடி மகிழ்வதாகவும் தெரிவித்தார்.

Hisar விமான நிலையத்திலிருந்து அயோத்திக்கு புதிய விமான சேவையையும் அவர் தொடங்கி வைத்தார்.

ஹரியானா மாநிலத்தில் புதிய அனல் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களையும் பிரதமர் இன்று தொடங்கி வைக்கிறார்.

>>>>>>><<<<<<

போதைப்பொருள் இல்லா இந்தியவை உருவாக்க பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், குஜராத்தில் சர்வதேச கடல் எல்லை அருகே ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான 300 கிலோ போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதை குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான நடவடிக்கையில் இணைந்து செயல்பட்ட இந்திய கடலோர காவல்படை மற்றும் குஜராத் காவல்துறைக்கு அமைச்சர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

வங்கிக் கடன் முறைகேடு வழக்கில் தலைமறைவாக இருந்து வந்த வைர வியாபாரி மெகுல் சோக்சி பெல்ஜியம் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய புலனாய்வு அமைப்பு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி கூறியுள்ளார்.

வங்கிகளில் முறைகேடு செய்யப்பட்ட மக்களின் பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>>>><<<<<<

தமிழகத்தில் சித்திரை திருநாளான இன்று தமிழ் புத்தாண்டாக விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

தமிழகத்தில் மட்டுமின்றி உலகெங்கிலும் உள்ள தமிழ் பேசும் மக்கள், சித்திரை திருநாளை ஒட்டி, புத்தாடை அணிந்து, கோவில்களுக்குச் சென்று வழிபாடு செய்து வருகின்றனர்.

மக்கள் தங்கள் வீடுகளில் வடை, பாயாசத்துடன், அறுசுவை உணவுகளை படைத்து, தமிழ் புத்தாண்டை சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

>>>>>>><<<<<<

தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தில் தமிழகத்தின் நாமக்கல் மாவட்டம், மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுள்ளது.

இந்த துறையின் சிறப்பான செயல்பாட்டினால், காசநோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கண்ணன் 52 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

பிரதமரின் இல்லந்தோறும் சூரியசக்தி திட்டத்தின் ஒருபகுதியாக, நாகாலாந்து மாநிலத்தில் சூரியசக்தி இயக்கத்தை அம்மாநில முதலமைச்சர் திரு. Neiphiu Rio இன்று தொடங்கி வைத்தார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த இயக்கத்தின் கீழ், வீட்டு மேற்கூரைகளில் 2 கிலோவாட் வரை சூரிய மின்தகடுகளை பொருத்த 96 சதவீதம் வரை மானியம் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக நடப்பு நிதியாண்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் கூறினார்.

>>>>>>><<<<<<

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் ஸ்மார்ட் ஃபோன், கணினி, செமிகண்டக்டர் மற்றும் இதர பொருட்களுக்கு தனியாக வரி விதிக்கப்படும் என்று அந்நாட்டு வர்த்தகத்துறை செயலர் திரு. Howard Lutnick தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக அமெரிக்கா மேற்கொண்டு வரும் வரிவிதிப்பு நடவடிக்கைகள், செமிகண்டக்டர் மற்றும் இதர மின்னணு பொருட்களுக்கு பொருந்தாது என்று அந்நாடு தெரிவித்திருந்த நிலையில், அவர் இவ்வாறு கூறினார்.

சிப்-கள் மற்றும் தொலைக்காட்சி உதிரி பாகங்களுக்கு, தெற்காசிய நாடுகளை சார்ந்துள்ளதை குறைத்து, அமெரிக்காவிலேயே உற்பத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் திரு. Howard Lutnick வலியுறுத்தினார்.

>>>>>>><<<<<<

ஃபிஜி தீவில் இன்று காலை 6 புள்ளி 3 ரிக்டர் அளவில் கடுமையாக நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதுகுறித்து தெரிவித்துள்ள அந்நாட்டின் தேசிய புவியியல் ஆய்வு மையம், 10 கிலோமீட்டர் ஆழத்தில் உருவான இந்த நிலநடுக்கம் காரணமாக, தரைப்பகுதியில் நில அதிர்வுகள் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தை அடுத்து சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

>>>>>>><<<<<<

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை அணி – லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இரவு மணி 7.30-க்கு இப்போட்டி தொடங்குகிறது.

>>>>>>END<<<<<<